சுருக்கம்

பள்ளிக் கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி –திரு.கோ.நீலமேகம்(மறைவு) என்பவரின் மகன் திரு.நீ.விஜயகாந்த் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (ப.க.4(1)த் துறை

அரசாணை (1டி) எண்.124

நாள் 14.09.2023
திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம், ஆவணி 28
படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண்.39164/ஜே/இ3/2020, நாள் 31.12.2022.

******

**ஆணை:-**

நீலகிரி மாவட்டம், ஆர்.கே.புரம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் இரவுக் காவலராகப் பணிபுரிந்த திரு.கோ.நீலமேகம் என்பார் பணியிலிருக்கும் போது 14.04.2009 அன்று பணியிடைக் காலமானார். அவரது மனைவி, தனது மகன் திரு.நீ.விஜயகாந்த் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரி 18.08.2010 அன்று விண்ணப்பித்துள்ளார். திரு.நீ.விஜயகாந்த் என்பவர் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை மார்ச் 1999-இல் தேர்ச்சி பெற்றுள்ளார். இவரின் பிறந்த தேதி 18.02.1984. மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி தனியர் கருணை அடிப்படையிலான பணி நியமனத்திற்குரிய அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளார். இறந்த அரசு ஊழியரின் குடும்பத்தின் வறிய நிலையையும், அவருடைய குடும்பத்தில் எவரும் அரசு பணியில் இல்லை என்பதையும் கருத்தில் கொண்டு, திரு.நீ.விஜயகாந்த் என்பவருக்கு நீலகிரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.0131/அ1/2018, நாள் 06.01.2020-ல், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, அவர் 07.01.2020 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

[signature] 8/4/24
HEADMASTER
Govt. Hr. Sec. School.
Pandalur-643 233
The Nilgiris District, T.N.

Scanned with OKEN Scanner